திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறியதில், பெண்களை ஒதுக்குவது போன்ற ஒரு நிலை ஏற்படுகிறது. பெண்களுக்கு சமநிலை என்று கூறும்போது, சமுதாயத்திலே ஆண்கள் செய்வது போன்ற வேலைகளிலும் அவர்களை ஈடுபடுத்துவது நம்முடைய கடமை என்பதை அரசு உணருகிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பதிலிலே எங்கே தனியாக ஒதுக்கினது போல் இருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சமுதாயச் சூழ்நிலையை உணர்ந்து, அந்த அடிப்படையில்தான் இந்தப் பணிகள் தரப்பட்டிருக்கின்றன.

High Schools opened by the Government

* 214 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education be pleased to state the number of High Schools opened by the Government after 1st April 1970 in the 'A' Wing?

அரசால் தொடங்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிகள்.

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

1—4—1970-க்குப் பின்னர், 'எ' பிரிவில் அரசால் தொடங்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 142.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, 1—4—1970-க்கு முன்னால் இருக்கக் கூடிய 'பி' பிரிவு பள்ளிகள் எவ்வளவு இருக்கின்றனவென்று அறிய விரும்புகிறேன். இப்போது 'எ' பிரிவு 'பி' பிரிவு என்று இருக்கும் பள்ளிகளை ஒன்றாக இணைப்பதற்கு அரசு விரைவாக முடிவு எடுக்குமா அல்லது 'எ' பிரிவு பள்ளிகளையும் 'பி' பிரிவு பள்ளிகளையும் தனித்தனியாக வைக்க, முடிவு எடுக்க இருக்கிறதாவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பள்ளி விவரம்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் தரப்படும். 'எ' பிரிவு பள்ளிகளையும், 'பி' பிரிவு பள்ளிகளையும் ஒன்றாக இணைத்து, செயல்படுத்த

இயலுமா என்பதுபற்றி, பல்வேறு கூட்டங்களில் அதனுடைய பிரதிநிதிகளை வைத்து ஆராய்ந்து, பேசிப் பார்த்ததில் எந்த முடிவும் வரவில்லை, இரண்டு சாராரும் விட்டுக்கொடுக்க மறுக்கிறார்கள் என்ற அளவுக்குத்தான் வந்தது. அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, எந்த முடிவும் காணாவிட்டால், இரு சாராருடைய உரிமைகளும் பாதுகாக்கப்படும் அளவுக்கு தனித் தனியாக வைத்து நடத்துவதற்கு என்ன வழி முறைகளைக் காணலாம் என்பதுபற்றி ஆராயும் படியாக பள்ளிக் கல்வி இயக்குநரும், கல்விச் செயலாளரும் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். விரைவில் அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, கல்வி அமைச்சரவர்கள் கூறுவதிலிருந்து, தனித்தனியாக இருப்பதில் யாருக்கும் சங்கடம் இல்லாமல் இருக்கிற காரணத்தால், 'பி' பிரிவு பள்ளிகளைத் தனியாகவும் 'எ' பிரிவு பள்ளிகளைத் தனியாகவும், அவரவர்களுடைய உரிமை பாதிக்கப்படாமல் வைப்பதற்கு முடிவு எடுத்து, கல்வி மானியக் கோரிக்கை வருவதற்கு முன்னாலேயே அறிவிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன். அது குறித்து விரைவாக இந்த பட்ஜெட் கூட்டத்தொடரிலேயே முடிவு எடுக்கப் படுமாவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, விரைவிலேயே அதற்கு விடை அளிக்க இயலுமாவென்று என்னால் சொல்ல முடியாது. அதுபற்றி ஆராயும்படியாகக் கூறியிருக்கிறேன். அதற்குள் முடிவு வந்தால் அறிவிக்கப்படும்.

Central Aid Scheme

* 215 *Q.*—THIRU S. S. THENNARASU (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of teachers to be appointed during this academic year (1973–74) under the Central Aid Scheme;

(*b*) among them, the number of teachers allotted to Ramanathapuram Educational District; and

(*c*) the number of posts allotted to Panchayat Union Schools and Private Schools respectively?

மத்திய அரசின் உதவித் திட்டம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்: